# கடற்கரை கவியரங்கு– 643

## நாள்: 03-11-2024

# நிறைந்து வாழ்வோம்!

மண் மீதில்நாம் வாழும் வரையில்
திண்ணமாய் சிந்தையைத் திகழவிட்டால்,
எண்ணியவற்றை அடைதல் இயலும்!
புண்ணியம் என்றும் பாவம் என்றும்
புறத்தொழில் சூடி அலையாதிர்!
பண்பில் நிறைந்து நல் பக்குவம்

கொண்டு நாம் வாழும்போது,
நன்னெறி தானே நலமுடன் திகழும்?
அன்பால் அனைத்தையும் ஆளநாம்,
அடுத்துக் கற்றால் அந்தப் பாவம்
என்பதே பக்கத்தில் வராது!
மண்பதை யாவும் இயற்கையின் வழியே!

மனிதனுக்கு மட்டுமே உலகம் இல்லை!
அனைத்து உயிர்களையும் நேசித்தெழுவோம்!
அணியாய் அன்பால் அணைத்து வாழ்வோம்!
பிணி இல்லா வாழ்வை பெற்று மகிழ்வோம்!
மணியாய் சொற்களில் அன்பையே விதைப்போம்!
மனிதருள் பேதமை அகற்றி வாழ்வோம்!

இனி இந்த வாழ்வு எங்கே நிறையும்
என்பதை இங்கு யார்தான் அறிவரோ?
புனிதம் என்பது இனியன சொல்லல்!
போர்க்குண மாந்தரை அன்பால் வென்றிட,
கூடிவிடும் பெரும் துன்பம் இனி ஏது?
கொப்பளிக்கும் துயர்தான் அங்கு ஏது?

- **கவிவளவன்.** ஆகிய **கு.ப. அசோகன்.**
**03-11-2024 (மாலை 04-15)**